seme

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கல்விப்பீடம்
## பட்டப்பின் படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி – 2016/2017
முதலாம் பருவம்
## CU 505 கல்வி அளவீடும் கணிப்பீடும்

நேரம்: 30 நிமிடங்கள்

சுட்டிலக்கம்:..............................

பகுதி I

- சகல வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை தருக.
- சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

(1) ஓப்பீட்டுரீதியான அளவீடு மற்றும் நேரடியான அளவீட்டுக்கு உதாரணமாகக் கொள்ளப்படுவது முறையே

1. மனப்பாங்கு சோதனைப்புள்ளி, கணிதபாட அடைவுப் புள்ளி
2. உளச்சார்புச் சோதனைப்புள்ளி, நுண்மதிச் சோதனைப் புள்ளி
3. சித்திர பாடச் சோதனைப்புள்ளி, மாத வருமானம்
4. மாணவர்களின் உயரம், மாணவர்களின் நிறை

(2) A. ரமேஷ் கணிதபாடத்தில் 60 புள்ளிகளைப் பெற்றான்

B. சுமதி மொழிப் பாடத்திற்கு A சித்தியைப் பெற்றாள்

மேலே தரப்பட்டுள்ள

1. இரண்டு கூற்றுகளும் அளவீட்டுக்கான உதாரணங்களாகும்.
2. இரண்டு கூற்றுகளும் மதிப்பீட்டுக்கான உதாரணங்களாகும்.
3. A அளவீடு மற்றும் B மதிப்பீட்டுக்கான உதாரணங்களாகும்
4. A மதிப்பீடு மற்றும் B அளவீட்டுக்கான உதாரணங்களாகும்.

(3) A. 19 வயதை விடவும் குறைந்த வயதினர் தெரிவு செய்யப்பட்டனர்.

B. செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வாக்கியமாக மாற்றும் ஆற்றலுடைய மாணவர்கள் பேச்சு போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி கூற்றுகள்

1. இரண்டும் நியமம்சார் மதிப்பீடுகளாகும்.
2. இரண்டும் நியதிசார் மதிப்பீட்டுகளாகும்.
3. A நியமம்சார் மதிப்பீடு B நியதிசார் மதிப்பீடு
4. A நியதிசார் மதிப்பீடு B நியமம்சார் மதிப்பீடு

(4) கணிப்பீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கற்றல்பால் கொண்ட நாட்டத்தை அதிகரிப்பதற்கு பின்னூட்டல்கள் வழங்கப்பட்டன
- மாணவர்களின் குறைபாடுகளை இனங்காண்பதற்கு சோதனை நடாத்தப்பட்டது
- மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கு சோதனை நடாத்தப்பட்டது

மேற்படி மூன்று கணிப்பீடுகளும் முறையே

1. இறுதி கணிப்பீடு, இடையிட்ட கணிப்பீடு, குறைகாண் கணிப்பீடு
2. இடையிட்ட கணிப்பீடு, குறைகாண் கணிப்பீடு, இறுதி கணிப்பீடு,
3. குறைகாண் கணிப்பீடு, இறுதி கணிப்பீடு, இடையிட்ட கணிப்பீடு
4. இறுதி கணிப்பீடு, குறைகாண் கணிப்பீடு, இடையிட்ட கணிப்பீடு

(5) டீ. ஆர். கிரத்வோலின் எழுச்சியாட்சிப் பகுப்பியலுக்கிணங்க தனியாள் முரண்பாடற்ற விதத்தில் பெறுமதித் தொகுதியொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் பின்வரும் எந்த ஆற்றல் மட்டத்திலாகும்?

1. துலங்குதல்
2. நடத்தை உருவாக்கம்
3. ஒழுங்கமைத்தல்
4. பெறுமதி வழங்குதல்

(6) 'மாணவர் பெயர்சொல் என்றால் என்ன' என்பதை வரைவிலக்கணப்படுத்தும் அதே சமயம் 'தரப்பட்டுள்ள பல்வேறு வாக்கியங்களுள் மாணவர் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் வேறுபடுத்தி இனங்காண்பர்' என்கின்ற நடத்தைரீதியாக எழுதப்பட்ட கற்றல் நோக்கங்கள் இரண்டும் நோக்கங்களின் அறிகையாட்சிப் பகுப்பில் எந்தெந்த ஆற்றல் மட்டங்களை முறையே அளவிடுகின்றன?

1. அறிவும் கிரகிப்பும்
2. அறிவும் பிரயோகமும்
3. கிரகிப்பும் மதிப்பீடும்
4. அறிவும் பகுப்பும்

(7) ஈ. ஜே. சிம்சனின் உளவியக் ஆட்சிப் பகுப்பில் மாணவர் தான் கற்ற திறனை சந்தேகத்துக்கு இடமின்றி கைவினைத்திறனுடன் வெளிப்படுத்திக் காட்டும் ஆற்றலானது பின்வருவனவற்றுள் எந்த ஆற்றல் மட்டத்துக்குரியது?

1. வழிகாட்டப்பட்ட துலங்கல்
2. பொறித்தாக்கம்
3. சிக்கலான வெளிவாரியான துலங்கல்
4. இயைபாதல்

(8) பின்வருவனவற்றுள் எது விரிவான கட்டுரைவகைச் சோதனையின் பிரதான குறைபாடாகும்?

1. பரீட்சகர்களால் வழங்கப்படும் புள்ளிகளுக்கிடையிலான குறைந்த உறுதிப்பாடு
2. கட்டாய வினாக்களுக்கு மேலதிகமாக தெரிவு வினாக்களை வழங்குதல்
3. விடையளிப்பதற்கு வழங்கப்படும் கால அவகாசம் போதாமை
4. வினாத்தாள் முழுபாடப் பரப்பையும் பிரதிநிதித்துவம் செய்யாமை

(9) 'மாணவர்கள் இளங்குற்றவாளிகளாவதற்கான பிரதான காரணமாக அமைவது .............. ஆகும்' என்கின்ற இடைவெளி நிரப்பும்வகை வினாவின் பிரதான குறைபாடு யாது?

1. ஊகத்தின் அடிப்படையில் இதற்கு விடையளிக்கலாம்
2. இடைவெளியானது கூற்றின் தொடக்கத்தில் கொடுக்கப்படவில்லை
3. வழங்கப்படும் புள்ளிகளில் நம்பகம் குறைவடைதல்
4. இது இடைவெளி நிரப்பும் வகைக்கு பொருத்தமானது அல்ல

(10) கீழே தரப்பட்டுள்ள பலவுள்தெரிவு வகை வினாவை வாசிக்குக.

'பின்வருவனவற்றுள் வங்காளதேசத்தில் பயன்படுத்தப்படும் நாணய வகை,

1. ரூப்பியா 2. பூட்டான் ரூபாய் 3. டக்கா 4. நேப்பாள் ரூபாய்'

என்கின்ற வினாவின் பிரதான குறைபாடு யாது?

1. தண்டுப்பகுதி தெளிவற்ற கூற்றினைக் கொண்டிருத்தல்
2. நீக்கிவிடும் முறையில் சரியான விடையினைத் தெரிவுசெய்ய இயலுமாதல்
3. தண்டுப் பகுதிக்கு பொருந்துகின்ற விதத்தில் துலங்கல்கள் அமையாதிருத்தல்
4. தண்டுப் பகுதியில் தேவையற்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்

(11) வினையாற்றல் சோதனையை அடிப்படையாகக் கொண்ட கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. வினையாற்றல் சோதனை மூலம் அறிகையாட்சிக்குரிய ஆற்றல்களை அளவிட முடியாது.

B. கணிப்பீட்டுக்கு எழுத்துரீதியான துலங்கல்கள் போதாத சந்தர்ப்பங்களில் இது பயன்படுத்தப்படும்

இவற்றுள்,

1. A சரியானது B தவறானது
2. A தவறானது B சரியானது
3. A யும் B யும் சரியானவை
4. A யும் B யும் தவறானவை

(12) விரிவான கட்டுரை வகைச் சோதனையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் நம்பகத் தன்மையினை தீர்மானிப்பதற்கு பொருத்தமான நம்பகக் கணிப்பு முறை எது?

1. சோதனை மறுசோதனை முறை
2. சமாந்தர அமைப்புமுறை
3. உள்ளக உறுதிப்பாட்டு முறை
4. பரீட்சகர்சார் நம்பகம் துணியும் முறை

(13) பின்வருவனவற்றுள் எது சோதனைப் புள்ளிகளின் உயர் நம்பத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமையாது?

1. விடைகளைத் திருத்துவதற்கான பயிற்சி வழங்குதல்
2. வினாக்களை அமைப்பாக்கி வழங்குதல்
3. விடை எழுதுதல் தொடர்பாக மிகவும் துல்லியமான அறிவுறுத்தல்கள் வழங்குதல்
4. தாழ்மட்ட ஆற்றல்களை அளவிடுவதற்கு பதிலாக உயர்மட்ட ஆற்றலை அளவிடும் வினாக்களை வழங்குதல்

(14) அடைவுப் பரீட்சையின் பாட உள்ளடக்கத் தகுதியுடன் தொடர்பான பிரச்சினைக்கு பொருத்தமான உதாரணமாக அமைவது எது?

1. பெருமளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையத் தவறுதல்
2. ஒரு சில பாட அலகுகளை பரீட்சை வினா உருப்படிகள் பிரதிநிதித்துவம் செய்யாமை
3. சோதனையில் குறுவிடை வினா வகை உருப்படிகள் இடம்பெறாமை
4. விரிவான கட்டுரை வகை வினாக்கள் இடம்பெற்றுள்ளமை

(15) கீழே தரப்பட்டுள்ள புள்ளித்தொகுதியின் வீச்சு மற்றும் காலணைஇடை வீச்சு ஆகியன முறையே

12, 14, 15, 19, 19, 22, 27, 31, 39, 40, 43, 47

1. 16, 28 2. 35, 24 3. 36, 37 4. 18, 39

(16) கீழே தரப்பட்ட புள்ளித் தொகுதியின் ஆகாரம், இடையம் மற்றும் கூட்டலிடை முறையே

6, 8, 12, 18, 18, 20, 24, 46

1. 18, 18.5, 19 2. 18, 18, 18
3. 18, 18.5 19.4 4. 18, 18, 19

(17) புள்ளிகளை தண்டு இலை வரைபடத்தில் குறிப்பதன் பிரதான நன்மை

1. புள்ளிகள் பரவியிருக்கும் விதம் பற்றிய அறிந்து கொள்ளலாம்.
2. சகல புள்ளிகளையும் பற்றி தனித்தனியாக கவனத்திற் கொள்ளலாம்
3. இது பற்றிய விளக்கம் குறைந்தவர்களும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியும்.
4. வேறு முறைகளுடன் ஒப்பிடுகையில் இம் முறை செலவு குறைந்தது

(18) 11-20 என்ற வகுப்பாயிடையின் நடுப்பெறுமானம் மற்றும் கீழ் மற்றும் மேல் உண்மை எல்லைகள் முறையே

1. 20, 11.5, 20.5
2. 16, 20.5, 10.5
3. 15.5, 10.5, 20.5
4. 11, 16, 20.5

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது தமிழ்மொழிப் பாடத்துக்கும் ஏனைய நான்கு பாடங்களுக்கும் இடையிலான இணைபுக் குணகத்தின் பெறுமதிகளைக் குறித்துக் காட்டுகின்றது.
இதனைப் பயன்படுத்தி வினா இலக்கங்கள் 19 மற்றும் 20 ஆகியவற்றுக்கு விடை தருக.

| பாடங்கள் | கணிதம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | இந்து நாகரிகம் |
|---|---|---|---|---|
| தமிழ் மொழி | -0.21 | 0.01 | -0.82 | 0.56 |

(19) தமிழ்மொழிப் பாடத்துடன் மிகவும் பலவீனமான இணைபைக் காட்டும் பாடம் எது?

1. கணிதம் 2. விஞ்ஞானம் 3. ஆங்கிலம் 4. இந்து நாகரிகம்

(20) ஒரு பாடத்தின் புள்ளிகள் குறைவடைந்து செல்கையில் மற்றொரு பாடத்தின் புள்ளிகளும் குறைவடையும் போக்கினில் உயர் இணைபைக் காட்டும் பாடங்கள் எவை?

1. மொழியும் கணிதமும்
2. மொழியும் விஞ்ஞானமும்
3. மொழியும் ஆங்கிலமும்
4. மொழியும் இந்து நாகரிகமும்

ααααααααα